DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : வேலுச்சாமி | Father/Husband Name : பெருமாள்சாமி |
| Age : 62 | Village : கல்லமநாயக்கன்பட்டி |
| Taluk : | Calling : உதவி ஆய்வாளர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9 Mar 2026 15:51
(Accused Present)

**முதல் விசாரணை** :-

1. நான் 30.04.2024 ஆம் தேதி வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றேன்.

2. இதற்கு முன்பு 22.04.2022-ம் தேதி 10.45 மணிக்கு வெம்பக்கோட்டை காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது, அ.சா.1 ராஜேஸ்வரி நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 141/2022 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294 (பி), 323 மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் மனுவை நீதித்துறை நடுவர் எண் இரண்டு சாத்தூர் அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், ஒரு நகலை என்னுடைய புலன் விசாரணைக்கும் எடுத்துக் கொண்டேன்.

3. அன்றைய தினம் பகல் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று, சாட்சிகள் காளிமுத்து மற்றும் பழனிச்சாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கினேன் **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. பின்னர், சாட்சிகள் ராஜேஸ்வரி, செல்வன் கணேஷ் குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். 22.04.2024 ஆம் தேதி பகல் 13.30 மணிக்கு செவல்பட்டி காளியம்மன் கோவில் அருகே வைத்து கைது செய்து, அவரை காவல் அடைப்பிற்கு உட்படுத்தினேன்.

5. 23.04.2022 ஆம் தேதி சாட்சிகள் திருமலைகுமரன் மற்றும் சரவணகுமார் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்தேன். இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.1 ராஜேஸ்வரிக்கு காயம் இல்லை என்பதாலும், அவர் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்பதாலும் வழக்கின் சட்டப்பிரிவை இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294 பி, 323, மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்திலிருந்து இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294 பி, 352 மற்றும் பிரிவு நான்கு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றங்களாக மாற்றம் செய்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்து, அதே குற்றங்களுக்கு எதிரி மீது இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன். **(சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

6. சாட்சிகள் காளிமுத்து, பழனிகுமார், சரவணகுமார், திருமலைகுமரன் ஆகியோர் புகார்தாரர் ராஜேஸ்வரியின் உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்று 15 மணி நேரம் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

காலதாமதத்திற்கான காரணம் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகாரிலும் காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த 15 மணி நேரம் இடைவேளையில் அ.சா.1 ராஜேஸ்வரி எங்கு சென்றார், என்பதையும் என்ன செய்தார் என்பதையும் என்னுடைய விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். புகாரை எங்கு வைத்து எழுதினார் என்பதையும், யார் எழுதிக் கொடுத்தார் என்பதையும் அ.சா.1 ராஜேஸ்வரி என்னுடைய விசாரணையின் போது கூறவில்லை என்றால் சரிதான். அது தொடர்பாக நான் அவரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

7. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் இடம் குடியிருப்பு பகுதிகள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி என்றால் சரிதான். அது கிராம பகுதி என்பதால் ஒரு இடத்தில் சத்தம் கேட்டாலும் அனைவரும் ஒன்று கூடி விடுவார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் இடத்தில் அருகே குடியிருக்கும் பெருமாள் சாமி, கருப்பசாமி, கண்ணன், கோவம்மாள் ஆகியோர்களை நான் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கு பிறகு அ.சா.1 மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எதுவும் எடுத்துக் கொண்டாரா என்பது பற்றி நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் வீட்டில் வைத்து நடைபெற்றதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. அ.சா.1 ராஜேஸ்வரி அவருடைய புகாரில் எதிரி கையால் குத்தியதாக குறிப்பிடவில்லை என்றால் மாறி மாறி முதுகில் அடித்ததாக கூறியுள்ளார், குத்தியதாக கூறவில்லை. சாட்சிகள் சரவணகுமார் மற்றும் திருமலை குமரன் ஆகியோர்களையும் வழக்கு சம்பவத்தின் போது எதிரி அசிங்கமாக பேசியதாகவோ, தாக்கியதாகவோ என்னுடைய விசாரணையின் போதும், புகாரிலும் கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எத்தனை மணிக்கு வேலைக்கு சென்றார் என்பதையும், எத்தனை மணிக்கு வேலை முடிந்து வந்தார் என்பதையும் கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் எத்தனை மணிக்கு நடைபெற்றது என்று குறிப்பிட்டு புகாரில் கூறப்படவில்லை என்றால் சரியல்ல.

9. அ.சா.1 ராஜேஸ்வரிக்கு மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ளும்படி நான் அவரிடம் கூறவில்லை என்றால் அவர் நாட்டு வைத்தியம் பார்த்துக்கொள்வதாக கூறினார். எந்த ஊரில் நாட்டு வைத்தியம் பார்த்தார் என்பதை அவர் என்னுடைய விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். நான் எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார் மனு சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து எதிரிக்கு எதிராக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி எந்த காலத்திலும் அ.சா.1 ராஜேஸ்வரியை தாக்கவோ, முடியை பிடித்து இழுத்தவோ, அசிங்கமாக பேசவோ இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

9 Mar 2026 16:08

Judicial Magistrate 2, Sattur.